1968 மார்ச் 30]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) அத்தகைய செயற் குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : மணக்குடி காயலின் பக்கத்தில் கீழ் மணக்குடி, மேல் மணக்குடி என்ற மீனவ கிராமங்கள் இருக்கின்றன. அவர்கள் மீனுக்கு உப்பு கொண்டுவருவதற்கும், மாணவர்கள் ஆங்காங்கு செல்வதற்கும், தொழிலாளர்கள் பக்கத்து கிராமங்களுக்குச் செல்வதற்கும் வசதியில்லாத காரணத்தால் தினம் தினம் நீந்திச் செல்கிற நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலையை உணர்ந்து ஒரு நல்ல நடவடிக்கை எடுத்து இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த நிலையையும் உணருகிறோம், அதே நேரத்தில் நிதி நிலையையும் உணருகிறோம்.

* 367 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் டவுனிலிருந்து அண்ணாமலைநகர் செல்லும் பாதையில் உள்ள ரெயில் பாதையின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவ்வித திட்டம் ஒன்றும் அரசின் கவனத்தில் இல்லை.

(திரு. கே. விநாயகம் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிவசுப்பிரமணியன் அவர்கள் கேட்கவேண்டிய வினாவை திரு. விநாயகம் அவர்கள் கேட்கிறார்களா ?

THIRU K. VINAYAKAM : You trapped me very well, Mr. Speaker.

சார், இந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக எவ்வளவு எஸ்டிமேட் போடப்பட்டது? அதற்காக மத்திய சர்க்காரிலிருந்து எவ்வளவு தரப்படுகிறது? நம் சர்க்காரிலிருந்து ஏதாவது தரப்படுமா? அப்படி இருந்தால் அந்தத் தொகையைச் சொல்லி எப்போது அந்த வேலையை எடுத்துக்கொள்வார்கள் என்று சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்காக 10 இலட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சாலையின் ஒரு பகுதி அண்ணாமலைநகரைச் சேர்ந்தது. ஒரு பகுதி சிதம்பரம் நகராட்சியைச் சேர்ந்தது. இடையில் உள்ள ரயில்வே பாதை மத்திய சர்க்காரைச் சேர்ந்தது. மூன்று பேர்களும் ஒத்து வந்த பிறகுதான் இந்தக் காரியம் நடைபெற வேண்டும்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS